# இலங்கையின் பாதுகாப்புநிலை இந்தியபிரதமரிடம் தெரிவிக்கப்படும்

27-7-1991

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 11 இதழ்: 166
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27-7-1991

[கொழும்பு]
ஆனையிறவு மோதலையடுத்து இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பு நிலைமை பற்றி இந்தியப் பிரதமரிடம் தெரிவிக்கப்படும். இதன்பொருட்டு வெளியுறவு அமைச்சர் திரு.
(4ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு சேதம்பற்றி அரசு மௌனம்

[லண்டன்]
ஆனையிறவு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி யுத்தத்தில் பெருமளவு படையினர் கொல லப்பட்டதுடன் 4 கவச வாகனங்கள் தகர்க்கப்பட்டதாக ஜெர்மனியிலிருந்து விடுதலைப்
(4ம் பக்கம் பார்க்க)

## 2000 இல. தமிழர் தமிழகத்தில் கைது

[சென்னை]
தமது பெயர் விபரங்களை பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யாத 2,000 இலங்கைத் தமிழர்கள் தமிழக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
[3-ம் பக்கம் பார்க்க]

# விடுதலைப் புலிகளை சமாளிக்க வெளிநாடுகளிலிருந்து ராணுவ ஆலோசனைபெற அரசு முயற்சி!

## அதி நவீனரக ஆயுதங்களைப் பெறவும் முடிவு!!

[கொழும்பு]
வடக்கு - கிழக்கு பகுதிகளில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இடம் பெற்றுவரும் மோதல்களில் நவீன யுத்த உத்திகளைக் கையாள்வதற்கான ஆலோசனைகளையும் மற்றும் அதிநவீனரக ஆயுதங்களையும் வெளிநாடுகளிலிருந்து உடனடியாக பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் தற்போது மும்முரமாக ஈடுபட்டுவருவதாக தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளின் போரிடும் திறனும், ஆயுதங்களைக் கையாளும திறனும் அதிகரித்திருப்பதால் இராணுவத்தினர் அவர்களை எதிர்கொள்வது சிரமமாக இருப்பதாக இராணுவ உயர் வட்டாரங்கள் அண்மையில் அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்ததையடுத்தே வெளிநாட்டு இராணுவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாக அறியவந்துள்ளது.

குறிப்பாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் கடுமையான முற்றுகைக்குள்ளாகியிருப்பது அரசாங்கத்துக்கு உள்ளூர் மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தப் பாதிப்புகளிலிருந்து மீட்சிபெறுவதற்கு அரசபடைகள் ஆனையிறவுப போரில் அவசியம் வெற்றிபெற்றே ஆகவேண்டும் என்று அரசாங்கத்துக்கு தெரிவிக்கப்பட்டிருக்
(4-ம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவின் தமிழக விஜயம் ரத்து

[புதுடில்லி]
தமிழகத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுஇன்று செல்லவிருந்த பிரதமர் திரு நரசிம்மராவின் விஜயம் திடீரென ரத்துச்செய்யப்பட்டுள்ளது
பிரதமரின் தமிழக விஜயம் ஏற்கனவே திட்டமிடப்பட்டி
(4-ம் பக்கம் பார்க்க)

## துணைப்படையில் சேர பெருமளவு மக்கள் தயார்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப்புலிகளின் துணைப்படைப்பிரிவில் சேர்ந்து பணியாற்றுவதற்கு பெருமளவிலான பொது மக்கள் முன் வந்துள்ளனர்.
நேற்றுக்காலை யாழ். இந்துக் கல்லூரியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், விடுதலைப்புலிகளின் துணைப்படைப் பிரிவு
(3ம் பக்கம் பார்க்க)

## இராணுவபலத்தை அதிகரிக்க அரசு அவசர திட்டம்

(கொழும்பு)
இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் அவசர நடவடிக்கையினை எடுத்துவருகிறது.
வடக்கு கிழக்குப்பகுதிகளில் இராணுவத்தினருக்குஏற்பட்டு வரும் பெரும் இழப்புக்களை சமாளிக்கும் விதமாகவும், காயமடைந்துவரும் அதிகளவு படையினரை ஈடுசெய்யும்விதமாகவும் விடுதலைப்புலிகளுக்கு எதிராகதாக்குதல்களை தீவிரப் படுத்துமுகமாகவும் அரசு
[3-ம் பக்கம் பார்க்க]

## ஆசிரியர்கள் போராளிகளுக்கு களத்தில் உதவி

[யாழ்ப்பாணம்]
ஆனையிறவு இராணுவ முகாமினை மீட்கும் முகமாக விடுதலைப்புலிகள் நடாத்திவரும் எழுச்சிமிகு போராட்டத்தில் பாடசாலை ஆசிரியர்களும், போராளிகளுக்கு போர்க்களத்தில் உதவி வருகின்றனர்.
ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த 50 ஆண் ஆசிரியர்களு . 50 பெண் ஆசிரியைகளும், போர்க்களத்தில் காய
(4-ம் பக்கம் பார்க்க)

## அவசரகால நிலைமை மேலும் நீடிப்பு

(கொழும்பு)
அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் சட்டமூலம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது,
சட்டமுலத்திற்கு ஆதரவாக 121 வாக்குகளும் எதிராக 42 வாக்குகளும் கிடைத்தன.

## புலிகளுக்கு ஸ்ரீல. சுதந்திரக்கட்சிநிதியுதவி அமைச்சர் ரணில்குற்றச்சாட்டு

[கொழும்பு]
ஸ்ரீ ல. சு சு. கட்சி சேகரித்து வரும் கட்சி நிதி விடுதலைப் புலிகள் ஆயுதம் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப் படுகிறது என்று வலுவான சந்தேகம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.''
சபை முதல்வரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம்நாடாளுமன்றத்தில் அவசரகால நீடிப்புப்பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து
[4ம் பக்கம் பார்க்க]

## ஜெர்மனியிலுள்ள இலங்கைத் தமிழர் பிரான்ஸ் செல்ல முயற்சி

[பேர்லின்]
ஜெர்மனியில் வசிக்கும் ஜெர்மன் பிரஜா உரிமை இல்லாத சகல ஆசிய நாட்டவர்களையும் குறிப்பாக இலங்கையரை கடந்த மாதம் 30 ம் திகதியிலிருந்து நாட்டைவிட்டு வெளியேறுமாறு ஜேர்மன் அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து அங்குவாழும் இலங்கைத்தமிழர் அனைவரும் பிரான்ஸ்நாடு நோக்கி தற்பொழுது படையெடுக்க தொடங்கியுள்ளனர்.
[4-ம் பக்கம் பார்க்க]

## அமைச்சரின் கருத்துக்கு சிறிமா மறுப்பு!

(கொழும்பு)
தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிதி உதவி வழங்கி வருவது குறித்த அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா நாடாளுமன்றத்தில் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு ஸ்ரீ ல. சு. கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மறுப்புத் தெரிவித்திருக்கிறார்.
[4ம் பக்கம் பார்க்க]

## விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்கவும்

[யாழ்ப்பாணம்]
''யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததனுல் 1991 க. பொ. த. சாதாரணதரப் பாடசாலைப் பரீட்சார்த்திகள் அநேகர் விண்ணப்பிக்கமுடியாமல் போய்விட்டது. அதனுல் விண்ணப்ப திகதியை நீடியுங்கள்.''
இவ்வாறு யாழ். கல்விப்
(4 ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் மணமக்கள் நிறைய இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் சந்திக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (சி 5024)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும், ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்பு நேரில். சனி, ஞாயிறு காலை 11-00—12-00 மணி. S. ஜெயராசா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (சி4962)

## வகுப்பு

Spoken English, English with Grammar and German Languages. ஆங்கிலம், ஜெர்மன் (டொச்) மொழிகள் விஷேச தனிப்பட்ட ரீதியில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. தொடர்பு கொள்க: ச. சொர்ணலிங்கம், இல. 4, கோபால் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (K.K.S. வீதி, மனோகரா தியேட்டர் அருகாமையில்). ஜெர்மன் மொழி பயிலத் தொடர்புகொள்ளவேண்டிய விலாசங்கள்: German Cultural Association: 1 S. Sornalingam, 4. Gopal Lane, Vannarponnai Jaffna. 2. S. B. Sabanayagam, 33, Kandy Rd., Jaffna. (சி-5028)

## வியாழ மாற்றம்

வியாழ மாற்றம், பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா. ஸ்ரீரமண பகவான் - அவதார புருஷர்களின் ஒரேவிதமான ஜெனன ஜாதகமும் அடங்கியவை. விலை 6/50. எங்கும் விற்பனையாகின்றன. விநியோகஸ்தர்கள்: கனகா ரேடர்ஸ், திருநெல்வேலி. நூலாசிரியர் Prof. சத்தியதாஸன், சித்தன் கேணி. (சி-5033)

## கட்டுரைப் போட்டி

பாலர் கல்வி ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியை வெள்ளி விழாவை முன்னிட்டு பாலர் கல்விக் கழகம் நடத்துகின்றது. பாலர் கல்வி சம்பந்தமான 1000 சொற்களுக்கு மேற்படாத மூன்று கட்டுரைகளுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதுடன் வெள்ளி விழா மலரில் பிரசுரிக்கப்படும். முடிவுத் திகதி: 30-08-1991. அனுப்பவேண்டிய முகவரி: 49/5, யாழ் றோட், யாழ்ப்பாணம். [சி-5025]

## தரன் ஸ்ரூடியோ

அவசரமாக பாஸ்போட் அடையாள அட்டைப்படங்கள், றபர்சீல்கள், விளம்பர போட், பிளாஸ்ரிக் போட் முதலியன பெறுவதற்கு தரன் படப்பிடிப்பாளர் 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4896)

## மாணவர் முன்மாதிரி

(யாழ்ப்பாணம்]

ஆனையிறவில் யுத்தத்தில் ஈடுபட்டுவரும் வீரவேங்கைகளுக்கு உதவிபுரியும்வகையில், வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய மாணவர்களும், ஆசிரியர்களும் பெருமளவிலான உணவுப் பொருட்களையும், வேறுபாவனைப் பொருட்களையும் விடுதலைப்புலிகளிடம் கையளித்துள்ளனர்.

இவர்கள் பலவகை உணவுப் பண்டங்கள், படுக்கைவிரிப்புகள், கட்டில்கள், சாக்குகள், உரப்பைகள், மண்வெட்டிகள், பிக்கான்கள், எண்ணை வகைகள் என்பனவற்றுடன், ரொக்கப்பணமும் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (வி)

# யுத்தம் தொடருமானால் பிரச்சனைக்கு தீர்வுகாண்பது கஷ்டமாக இருக்கும்

(கொழும்பு]

வடக்கு - கிழக்கு யுத்தம் தொடருமானால் அதற்குதீர்வு காண்பது கஷ்டமாக இருக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். எச். எம். அஸ்வர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அவசர காலச்சட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக இடம் பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

எதிர்கட்சி தலைவர் திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா பேசுகையில் ''வடக்கு-கிழக்கு பிரச்னைகள்தொடர்ந்தும் இருப்பதால் மனித உயிர்கள் அழிக்கப்படுவதனை தடுக்க முடியாது'' என்றார்.

## இன்று

யாழ்ப்பாணம்

நல்லூர் பால கதிர்காம கந்தன் தீர்த்தத்திருவிழா இன்று பி.ப. 4-30 மணியளவில் நடைபெறும்.

புதிதாக உருவாக்கப்பட்ட வெள்ளை ஐராவத யானை வாகனத்தில் கந்தன் எழுந்தருளுவார். 0 0 0

யாழ்ப்பாணம்

யாழ். வண்ணை சிவன்கோவிலில் இன்று சனியும், ஞாயிற்றுக்கிழமையும் சாந்தி ஓமமும் தசா ஓமமும் பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறவுள்ளன.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## அஞ்சலி

(நாவற்குழி)

கட்டைக்காட்டில் இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட நேரடி மோதலின்போது வீரமரணத்தை தழுவிக்கொண்ட போராளிகளான நந்தன் (சின்னத்துரை ஜீவானந்தம் மட்டுவில்), தவச்செல்வி சித்ராஞ்சலி இராமநாதன் மிருசுவில் ஆகியோரது புகழுடல்கள் முதலில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் பின்னர் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

மக்கள் அஞ்சலியைத் தொடர்ந்து அஞ்சலிக்கூட்டம் இடம்பெற்றது.

பின்னர் புகழுடல்கள் உசனிலிருந்து ஊர்வலமாக பாண்ட் வாத்திய சகிதம் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மாவீரர்கள் துயிலும் புனித இடத்தில் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. (107)

# இராசி பலன்

27 - 07 - 1991

(தமிழ் திகதி ஆடி 11)

சனிக்கிழமை

பிரதமை பின் இரவு 1-46 வரை. திருவோணம் பின் இரவு 3-51 வரை. சித்த யோகம். இராகுகாலம் காலை 9-02 முதல் 10-32 வரை சுபநேரம் மாலை 3-02 முதல் 4-32 வரை.

மேடம்: முயற்சி பலிதம், குடும்ப மகிழ்ச்சி, பொதுஜன மதிப்பு.

இடபம்: தொழில் சிறப்பு, மனப்போராட்டம், வாக்கு வசீகரம்.

மிதுனம்: பணியாள் துன்பம், உடல் உபாதை, புத்திரர் சச்சரவு.

கடகம்: ஞானிகள் ஆசி, பணப்புழக்கம், அவதானக் குறை.

சிங்கம்: முதியோர் உதவி, வாக்குவன்மை, தொழில் பாராட்டு.

கன்னி: கைப் பொருள் நழுவல், அனுவசிய தொல்லை, பயம் மிகுதி.

துலாம்: வேண்டாத உறவு கடன் சுமை, தந்தையர் தொல்லை.

விருச்சிகம்: வெற்றிக் களிப்பு, பெண் உதவி, பயணங்களால் அனுகூலம்.

தனுசு: தடுமாற்றம், வாத ரோகம், புத்திரர் துன்பம்.

மகரம்: புதிய முதலீடு, இனசன உறவு, காரிய சித்தி.

கும்பம்: கருத்து மோதல், வீண்பிரமை, குடும்பப்பகை.

மீனம்: நினைத்தது கைகூடும் தெய்வீகச்செலவு, சகோதர உதவி.

- ஜோஸ்யர்

## வியாழ மாற்றம்

### சாந்தி ஹோமம்

மல்லாகம் பழம்பதி பிள்ளையார் தேவஸ்தானத்தில் 07-08-1991 புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வியாழ மாற்ற சாந்திஹோமம் நிகழும்.

பங்குபற்ற விரும்பும் அடியார்கள் 31-07-1991க்கு முன் தேவஸ்தானத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-5030) பழம் பிள்ளையார் ஆதீனம், மல்லாகம்.

## விதைகள் தேவை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு (T. R. R. O) பின்வரும் விதைகள் தேவைப்படுகின்றன. இவற்றை விநியோகிக்கக்கூடிய விதைக் கமக்காரர்கள் உடன் எம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தேவைப்படும் விதைகள்:

பாசிப்பயறு, கௌபி, குரக்கன், எள்ளு, வெண்டி, கத்தரி, நீளப்பயிற்றை, பாகல், புடோல், தக்காளி.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

செயலாளர்,
அகதிகள்
புனர் வாழ்வு நிறுவனம்
(T. R. R. O.)
106, நாலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [ஏ 1462]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் சபாபதிப்பிள்ளை செல்லையா

(தலவாக்கொல்லை பிரபல வர்த்தகர்)

மலர்வு: 09-02-1927 உதிர்வு: 27-06-1991

தினங்கள் உருண்டோடி இன்று 31 தினங்கள்
வந்துவிட்டன. காலங்கள் மறைந்ததையா......
கனவினிலும் நீங்கள் தானய்யா... காலன்தான்
கவர்ந்து சென்றானே நாம் அறியோம்......

தங்கள் ஆத்மா சாந்திபெற அனைவரும்
பிரார்த்திப்போம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27-07-1991) சனிக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் அந்திமக் கிரியைகளில் பலவழிகளிலும் உதவிகளை நல்கிய உற்றார், உறவினர் நண்பர்களுக்கு குடும்பத்தார் சார்பில் நன்றியை நவில்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
சங்கானை. பேரப்பிள்ளைகள்.

(ஏ-1456)


போராட்ட சூழலில்..... உங்கள் உறவினர்களின்
வெளிநாட்டு தபால்கள் காலதாமதமாகச் சென்றடைவதை

# D H L தபால்சேவை துரிதப்படுத்துகின்றது!!

பாதுகாப்பாகவும் உரிய இடத்தில் கிடைக்கவும்
சகல வெளிநாட்டுத் தபால்களையும் எம்மிடம் ஒப்படையுங்கள்.

DHL WORLDWIDE EXPRESS

# DHL International

C/o, Cosmos
Marketing Services,
120, K. K .S, Road, Jaffna.

(ஏ-1461)

# ஆனையிறவில் 14-22ம் திகதி யுத்தத்தில் வீரமரணமடைந்த வீரவேங்கைகள்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாம் சுற்றுடலிலும் கட்டைக்காடு பகுதியிலும் தரையிறக்கப்பட்ட இராணுவத்துடனும் நடந்த மோதலில் கடந்த 14-22 திகதி வீர மரணமடைந்த வீரவேங்கைகள் விபரம் வருமாறு:

(நேற்றைய தொடர்ச்சி)

58. குருபரன் இராசையா சந்திரசேகரம், நாகர் கோயில் ரேட் எழுதுமட்டுவாள்,

59 பாபு கந்தசாமி ஆனந்தன், வைரவர் கோவில் வீதி விசாம்கேணி, கிரான்.

60. பசுபதி இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன், மறுவன் புலவு, தனங்கிளப்பு, சாவகச்சேரி.

61. ராஜேந்தர் பொன்னுத்துரை ராஜேந்தர், வேப்பங்குளம், அடம்பன், மன்னார்.

62. றெபின்சன் திருமேனிப்பிள்ளை கிருபாரன் அரசடித்தீவு. கொக்கட்டிச்சோலை.

63. சிதம்பரநாதன் தம்பு ஆனந்தராசா, கோகிலாக்கண்டி, கைதடி.

64. நிதி சோமநாதன் நித்தியானந்தமூர்த்தி, 107, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

65. குணராஜ் அமுதலிங்கம் குமார், தர்மபுரம், கிளிநொச்சி.

66. டிலா திலகப்பிள்ளை ஆனந்தி, பரியாரிகண்டல், முருங்கன்.

67. பிரான்சிஸ் கதிரவேல் குமரவேள், தனக்கந்தை. துன்னாலை தெற்கு, கரவெட்டி.

68. சைமன் அந்தோனி யோசப் மக்கன் பிரதிப், யாழ் வீதி, மானிப்பாய்.

69. குரு பரராசசிங்கம் விமலேஸ்வரன், 7/8, 1ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

70. கஜன் சுந்தரராஜா, மகேஸ்வரன், அராலி தெறகு வட்டுக்கோட்டை.

71. குமுதன் வைத்திலிங்கம் தயாளன், சனசக்தி ச. ச. நிலையம், சிறுப்பிட்டி மேற்கு.

72. குரு மாரிமுத்து தயாநிதி, திருநகர், கிளிநொச்சி.

73. அர்ஜின், சிவானந்தன்-நந்தகோபால், 67, மனையாவெளி, சாண்டிக்கோ, திருமலை.)

74. விஜி (செல்லத்துரை-சிற்றம்பலம், இ. வி. வீட்டுத் கதாட்டம், மட்டக்களப்பு.)

75. பழனி (சின்னையா-கணேஷமூர்த்தி, பாலம்போட்டாறு, தம்பலகாமம்.)

76. லவித் (வேல்முருகு-விஜயகுமார், குச்சவெளி, திருமலை.)

77. நேரு (சாம்பமூர்த்தி - குகநேசன், புத்தூர் மேற்கு, புத்தூர்.)

78. ஜூலிட் (ஆன் அனுஷியா-மரியதாஸ், 40, ஜெயந்திநகர், கிளிநொச்சி.)

79. நாகேஸ்வரி (பிரபாவதி-சந்தன், சென். தோமஸ் வீதி, அடம்பன்.)

80. தர்சினி (றஞ்சினி- அருளம்பலம், உருத்திரபுரம், கிளிநொச்சி.)

81 எமல்டா (செல்லையா-நிமலராணி (4-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.)

82 விஜயா (ஜெயவதனி-தம்பிப்பிள்ளை, அல்வாய் தெற்கு, அல்வாய்.)

83. கொலின் (சண்முகானந்தன்-காந்தி, பிள்ளையார் கோவிலடி, மயிலிட்டி.)

84. ஸ்ரீபதி (வைகுந்தவேல்-சற்குணநேசன், கற்கோவளம்)

85. சோபிகா (பராசக்தி-கந்தசாமி, கட்டுவிளான், ஏழாலை மேற்கு, ஏழாலை.)

86. வானுமதி (செல்வக்குமாரி-செல்வராசா, நெடுங்கேணி, முல்லைத்தீவு.)

87. இலக்கியன் (கதிர்காமு-ரவீந்திரராசசா, அரியாலை கிழக்கு, அரியாலை.)

88. கில்பேட் (மயில்வாகனம்-விஜயகுமார், 900, செல்வபுரம், திருமலை.)

89. ராகுலன் (வேலாயுதம்-ஜெயரூபன், மாடி வீடு, வாழைச்சேனை.)

90. விக்கிரம் (அருளானந்தம்-சுந்தரராசா, ரெட்பானா, விசுவமடு.)

91. ஈழவன் (குமாரசாமி-ரமேஷ்குமார், 19/1. ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

92. வரன் (கரவணமுத்து ரவிச்சந்திரன்– 42, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்)

93. சுந்தரநாயகி வடிவேலு சிவமலர்-கிளாலி, எழுதுமட்டுவாள்)

94. அன்புதாஸ் (மாணிக்கம் துஷ்யந்தன் - கண்ணகிபுரம், உவர்மலை, திருமலை)

95. தாஸன் (பாலசுந்தரம் முரளீதரன்-தண்ணீரூற்று, முள்ளியவளை)

96. குசோக் (தியாகராசா கிருபாகரன் - தெல்லிப்பழை, காங்கேசன்துறை.

97. டொமினிக் (அருள் ஆனந்தராசா - திருவையாறு, கிளிநொச்சி)

98. நளினி (இரத்தினராசா மேகலா- உரும்பராய் வடக்கு, உரும்பராய்)

99. சந்திரா (பொன்ராசா மல்லிகா - மகிழம்பைக்குளம், வவுனியா)

100. சுடர்ரோன் (நடராசா ஜெகதீஸ்வரன்-'பொற்கலம்', தெல்லிப்பழை)

101. விஷ்ணு (ஜோசப் செல்லையா தியாகு- செட்டிகுளம் ரோட், பெரியகட்டு, வவுனியா)

102. அருள்ராஜ் (கந்தசாமி கலிகமுதன் (5ம் வாய்க்கால், பன்குளம், திருமலை)

103. ஆனந்த் (கிருஷ்ண பிள்ளை தவராசா– கரவெட்டி)

104. எடிசன் (முருகு, சாம்பல்தீவு, திருமலை)

105. குயிலன் (துரைராசா சசிகரன்-கொம்மாந்தறை. வல்வெட்டித்துறை)

106. லோலோ (முல்லைநாதன் முரளீதரன் - குரக்கன் புலம், புன்னாலைக்கட்டுவன்)

107. குணு (வனனியசிங்கம் புஷ்பராசா - 7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

108. பிலிப்ஸ் (செபஸ்தியான் றெக்சின்), 6/7, தொடர்மாடி, குருநகர், யாழ்ப்பாணம்.

109. கோணேஷ் (மார்க்கண்டு தாமோதரம்பிள்ளை), புத்தூர் மேற்கு, புத்தூர்.

110. வாசன் (சிங்கராசா குயின்ஸ்ரன்), இல. 14, மத்திய மேற்கு வீதி, குருநகர்.

111. ஆரமுது (தங்கவேல் விஜயகுமாரி), விளாவெட்டுவான், மட்டுநகர்.

112. மேகன் (பொன்னையா தமிழழகன்), வேலம்பிராய், நாவற்குழி கிழக்கு.

113. ஜெயா (முருகையா ஜெயசீலன்) புதுமுறிப்பு, உருத்திரபுரம்.

114. கருணு (நடராசா மகேந்திரன்) வெடிவைத்தகல், நெடுங்கேணி.

115. கந்தன் (பாலசிங்கம் ரமேஷ்) 3ம் குறுக்குத் தெரு. பருத்தித்துறை

116. அல்வின் (சிவபாலன் கருணாகரன்) 2ம் குறிச்சி, ஆரயம்பதி, மட்டக்களப்பு.

117. நளன் (சச்சிதானந்தம் நிர்மலன்) பாண்டிருப்பு, கல்முனை.

118. சிவானி (சண்முகநாதன் ரோகிணி) பொற்பதி ரோட், கொக்குவில்.

119. வில்சன் (வேலுப்பிள்ளை சந்திரகுமார்) மதவடி, சங்கானை மேற்கு.

120. ரெட்ணராச் (ரெட்டி) [தம்பிப்பிள்ளை அந்தோனிதாசன்] ஆஸ்பத்திரிவீதி, மன்னார்.

121. அசோக் (வைத்திலிங்கம் கணேஷ்குமார்) கண்டி வீதி, மாங்குளம்.

122. சங்கன் [சுப்பிரமணியம் கருணாநிதி] சிவன்கோவிலடி, எழுதுமட்டுவாள்.

123. ஜெயா [செல்லையா நடராசா] செங்கலடி, காயங்காடு, மட்டக்களப்பு.

124. மனோ (தியாகராசா மகேந்திரம்) சாகாமை ரோட், பனங்காடு, அக்கரைப்பற்று.

125. சிவமூர்த்தி (மகாலிங்கம் சதீஸ்வரன்) 2ம் வட்டாரம், புங்குடுதீவு.

126. கைலன் (ராமலிங்கம் ராஜி வன்னியர் வீதி, களுதாவளை, 01-களுவாஞ்சிக்குடி,

127. சிவசங்கர் (யோசப் ஜெயமணி) கோதண்டர் நொச்சிகுளம், வவுனியா.

128. விஜயன் (வேலுப்பிள்ளை மாரிமுத்து) சீனிவாசகம் வீதி, கொட்டடி.

129, நகுலேஸ்வரன் (சிங்காரவடிவேல் தவக்குமார்] வல்வெட்டித்துறை.

130. கைலன் (அரியரட்னம் துஷ்யந்தன்) 'சிபவதம்', வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

131. நிஸாந்தன் (அருளானந்தம் யூட் அன்ரனி) 8ம் வட்டாரம, நெடுந்தீவு மத்தி. நெடுந்தீவு.

132. மணிவாசன் (கணேசநாதன் ஜனார்த்தனன்) 68, கௌரி வாசம், காரைக்கால், இணுவில்.

133. கில்பேட் (யோசப் ஜொனி) 681, அன்புவழிபுரம் திருமலை.

134. ராஜபாரதி (நாகலிங்கம் சிறீதவானந்தன்) மகிழவெட்டுவான் வீதி, ஆயித்தியமலை, செங்கலடி.

135. காண்டி [கனகரட்னம் கனகேஸ்வரன்] 688, கொத்தம்பியாக்குளம், துணுக்காய்.

136. வேணு (கந்தசாமி பிரபா) கல்லடி, சிவானந்த மகாவித்தியாலயம், மட்டக்களப்பு.

137. ஆனந்தன் (நேசா அமலதாஸ்) 26, றக்கா வீதி, சுண்டுக்குழி.

138. தேவா [அற்புதநாதன் குகதாஸ்] குப்பிழான், ஏழாலை.

139. ஜேம்சன் (சாத்தையா ராமு) இந்துபுரம், முறிகண்டி.

## துணைப்படையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

மேற்படி, படைப்பிரிவில் சேர்ந்து கடமையாற்ற முன்வருவோர் பின்வரும் கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து நடந்துகொள்ள வேண்டும். என, திரு. யோகி தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைப்படைப்பிரிவில் சேர்ந்து கொள்ள விரும்புவோர் கண்டிப்பாக 30 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

அழைப்பில்லாத காலங்களில் இவர்கள்வீடுகளில் தங்கலாம்.

இராணுவ ரீதியிலான வேலைகளையும் யுத்தகளத்துக்கு அண்மித்த வேலைகளையும் செய்தல் வேண்டும்.

ஊழல், சமூகவிரோத செயல்கள் இல்லாதவராகவும் இனியும் செய்யமாட்டேன் என்றுஉறுதியும் அளிக்கவேண்டும்.

விபத்துக்களோ, வீரமரணங்களோ அடைந்தால் குடும்பத்துக்கு மாதாந்தக் கொடுப்பனவு கண்டிப்பாக வழங்கப்படும்.

இயக்கத்துக்கும் தலைமைக்கும் விசுவாசம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

அடிப்படையான இராணுவப் பயிற்சி அளிக்கப்படும்.

மாற்று இயக்கத் தொடர்புகள் ஏதும் இருத்தல் கூடாது.

மேற்படிபிரிவில் சேர்ந்து கொள்ளவிரும்புவோர் கோண்டாவிலில் உள்ள மக்கள் முன்னணிச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது [வி]

## இராணுவ பலத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினருக்கு புதியவர்களை சேர்க்கும் விதமாக நேற்று இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அவசரமாக பாதுகாப்பு அமைச்சினால் அழைக்கப்பட்டிருந்தனர்.

# க.பொ.த.உயர்தர பரீட்சை நேர அட்டவணை

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் [1991] பரீட்சை நேர அட்டவணை விபரம் வருமாறு:

**ஆகஸ்ட் 3ம் திகதி**

காலை 8-30 10-30 விலங்கியல் I

8-30 11-30 பிரயோக கணிதம் I

சரித்திரம் II

மாலை 12-30 15-30 சரித்திரம் I

**ஆகஸ்ட் 5ம் திகதி**

காலை 8-30 11-30 பிரயோக கணிதம் II

விலங்கியல் II

கிரேக்க உரோம நாகரிகம் I

சித்திரம் I

மாலை 12-30 15-30 மனைப் பொருளியல் I

இலத்தீன் I

**ஆகஸ்ட் 6ம் திகதி**

காலை 8-30 11-30 தூய கணிதம் I

பௌத்த நாகரிகம் I

மாலை 12-30 15-30 மனைப்பொருளியல் II

இலத்தீன் II

**ஆகஸ்ட் 7-ம் திகதி:**

காலை 8-30—10-30 தாவரவியல் I,

பௌத்த சமயம் I, தமிழ் I

மாலை 12-30—15-30 தூய கணிதம் II,

பௌதத நாகரீகம் II

**ஆகஸ்ட் 8-ம் திகதி**

காலை 8-30—11-30 தாவரவியல் II,

பௌத சமயம் II, தமிழ் II

மாலை 12-30—1-30 சங்கீதம் I [சிங்களம், கர்நாடகம், மேலத்தேய]

**ஆகஸ்ட் 9-ம் திகதி**

காலை 8-30—10-30 இரசாயனவியல் II,

பொருளியல் I, மலாய் I,

பேர்சிய மொழி I. ஹிந்தி I

மாலை 13-30—16-30 நாட்டியம் I, (சிங்களம், பரதம்)

அரபு I, யப்பானிய மொழி I

**ஆகஸ்ட் 10ம் திகதி:**

காலை 8-30—11-30 இரசாயனவியல் II,

நாட்டியம் II (சிங்களம், பரதம்)

அரபு II, யப்பானிய மொழி II

மாலை 12-30—15-30 சங்கீதம் II, (சிங்களம் கர்னாடகம், மேலத்தேய)

**ஆகஸ்ட் 12-ம் திகதி**

காலை 8-30—10-30 பௌதிகவியல் I

கணக்கியல் II, பாளி I

மாலை 12-30—15-30 இரசாயனவியல் I, ஜேர்மன் I

ருசியன் I, உருது I, சீனமொழி I

**ஆகஸ்ட் 13ம் திகதி**

காலை 8-30—11-30 பௌதிகவியல் II, கணக்கியல் II,

பாளி II, ஜேர்மன் II, உருது II, சீனமொழி II

மாலை 12-30—15-30 விவசாய விஞ்ஞானவியல் II

கிரேக்க உரோம நாகரிகம் II

**ஆகஸ்ட் 14-ம் திகதி**

காலை 8-30—11-30 பொருளியல் II, மலாய் II

பேர்சிய மொழி II, ஹிந்தி II

மாலை 12-30—15-30 சிங்களம் I

**ஆகஸ்ட் 15-ம் திகதி**

காலை 8-30—11-30 சிங்களம் II

மாலை 12-30—15-30 இந்து சமயம் I, கிறிஸ்தவம் I

இஸ்லாம் I, சமஸ்கிருதம் I

**ஆகஸ்ட் 16-ம் திகதி**

காலை 8-30—11-30 சித்திரம் II, ஆங்கிலம் I

மாலை 13-30—16-30 இந்துசமயம் II, கிறிஸ்தவம் II

இஸ்லாம் II, சமஸ்கிருதம் II

**ஆகஸ்ட் 17-ம் திகதி**

காலை 8-30 — 11-30 சித்திரம் III ஆங்கிலம் II

மாலை 12-30 — 15-30 வர்த்தகமும், நிதியமும் I

**ஆகஸ்ட் 19-ம் திகதி**

காலை 8-30 — 11-30 புவியியல் I

மாலை 12-30 — 15-30 வர்த்தகமும் நிதியமும் II

**ஆகஸ்ட் 20-ம் திகதி**

காலை 8-30 — 11-30 புவியியல் II

மாலை 12-30 — 15-30 இந்து நாகரீகம் I

இஸ்லாம் நாகரீகம் I

**ஆகஸ்ட் 21-ம் திகதி**

காலை 8-30 — 11-30 புவியியல் III

மாலை 12-30 — 15-30 இந்து நாகரீகம் II

இஸ்லாமிய நாகரீகம் II

**ஆகஸ்ட் 22-ம் திகதி**

காலை 8-30 — 11-30 அரசியல் மூல தத்துவங்கள் I

மாலை 12-30 — 15-30 அளவை விஞ்ஞான முறை I

**ஆகஸ்ட் 23ம் திகதி:**

காலை 8-30—11-30 அரசியல் மூல தத்துவங்கள் II

மாலை 12-30—16-30 அளவை விஞ்ஞான முறை II

**ஆகஸ்ட் 26ம் திகதி**

காலை 8-30 — 11-30 கிரேக்கம் I

மாலை 12-30 — 15-30 நாடகமும் அரங்கியலும் I [தமிழ், சிங்களம், ஆங்கிலம்]

**ஆகஸ்ட் 27ம் திகதி:**

காலை 8-30—11-30 நாடகமும் அரங்கியலும் II (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

கிரேக்கம் II, பிரெஞ்சு II

மாலை 12-30—14-30 நாடகமும் அரங்கியலும் III (தமிழ், சிங்களம், ஆங்கிலம்)

[152]

## 2000 இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அகதி முகாம்களுக்கு வெளியில் வாழும் சுமார் 10 ஆயிரம் அகதிகளில் 5000பேர் மட்டுமே தமது பெயர்விபரங்களை பொலிசில் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர் மீதான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 2 லட்சம் அகதிகள் தமிழகத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ‘வடக்கு-கிழக்கில் விடுதலைப்புலிகளுடன் அரசு பெரும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது’

## நாடாளுமன்றத்தில் பிரதமர் உரை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் புலிகளுடன் அரசு பெரும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. யுத்தம் மேற்கொள்ளப்படும் விதம் குறித்து இச் சந்தர்ப்பத்தில் எதனையும் வெளியிடமுடியாதுள்ளது.

இவ்வாறு பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்க நாடாளுமன்றில் அவசரகால சட்டம் நீடிப்பு விவாதத்தில் பேசுகையில் கூறினார். அங்கு அவர் மேலும் பேசுகையில்;

### புலிகள் கடும் எதிர்ப்பு

அரசு படைகள் மிகுந்த கஷ்டமான நிலையில் புலிகளின் மிகக் கடும் எதிர்ப்பை சந்திக்க வேண்டியுள்ளது. இந்த யுத்தத்தில் படைகள் துணிச்சலுடன் போரிட்டு வருகிறார்கள். படைகளுக்கு தேவையான சகல வசதிகளையும் அரசு வழங்கியுள்ளது. இதனை ஒரு தேசிய பிரச்னையாக கருதி ஆயுதப்படையினருக்கு சகலரும் ஆதரவளிக்க வேண்டுமென்றார்.

அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான திரு. ரணில் விக்கிரமசிங்க பேசுகையில்; பிரதமர் விஜயதுங்க பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக பதவி ஏற்று எடுத்த கடும் நடவடிக்கையை அடுத்து புலிகள் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் மீது குண்டுத்தாக்குதலை நடத்தினார்கள். ஆனையிறவு முகாம் மீதும் தாக்குதலை தொடங்கினார்கள்.

### முதல் நேரடி யுத்தம்

‘ஒப்பறேஷன் பலவேகய’ படையினர் தற்போது ஆனையிறவு முகாமை நோக்கி செல்கின்றனர். விமானப் படையினர் புலிகளின் இலக்குகளை தொடர்ந்தும் தாக்கி வருகிறார்கள். அரசு படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெறும் முதல் நேரடி யுத்தம் இது. ஆயுதப் படையினரின் தேவைகளை பூர்த்தி செய்ய அரசு சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் செயல்படுகிறது. கூட்டுப் படைத் தலைமையக குண்டு வெடிப்பிற்குக் காரணமான வரதனுக்கு புகலிடமளித்த ‘மலையக மக்கள் முன்னணி’த் தலைவர் சந்திரசேகரத்தை ஏன் எப்போதுமே பாதுகாக்க சுதந்திரக்கட்சி முற்படுகிறதென்றும் அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சிகள் சார்பில் பேசிய எம் பி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி குறிப்பிடுகையில், ஆனையிறவுப்போர் படையினருக்கு விடுக்கப்பட்ட பெரும் சவாலாக அமைந்துள்ளது. ஆயுதப்படையினருக்கு நவீன ஆயுதங்களை வழங்கி நவீனமயப்படுத்த வேண்டும் என்றார்.

### இந்தியாவை ஆதரிப்போம்

திரு. நிமல் ஸ்ரீபாலடிசில்வா பேசுகையில்; இந்தியா புலிகளுக்கெதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. புலிகளுக்கெதிராகச் செயற்படும் இந்தியாவுடன் நாம் உறவைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றார்.

இவ்விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர்கள், அரச தரப்பு எம். பிக்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள். ஆனையிறவு போர் பற்றியும் விடுதலைப்புலிகளின் பெரும்பலம் பற்றியுமே பிரஸ்தாபித்தனா, இந்திய கடற்படையும், இலங்கை கடற்படையும் 24 மணி நேரமும் கடும் ரோந்தில் ஈடுபட்டுவருகின்றபோதிலும் புலிகளிடம் தினமும் நவீனரக ஆயுதங்களும், விமானஎதிர்ப்பு ஆயுதங்களும் வந்து குவிந்தவண்ணமிருப்பதாகவும் இதனை எவ்வாறுவது தடுக்கவேண்டுமென்றும் இவர்கள் கூறினர்கள். [சி]

## தமிழீழ மக்களுக்கோர் அன்பான வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

போர்முனையில் காயமுற்று மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் போராளிகளுக்கு வேண்டிய மெத்தைகள், தலையணைகள், இளநீர், படுக்கை விரிப்புகள், பழம்துணிகள் போன்றவற்றை தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தை சேர்ந்தோர் வீடுவீடாக சேகரிக்க வருவர். அவர்களுக்கு தாராளமாக வழங்கி உதவும் வண்ணம் வேண்டுகிறோம்.

இச்சேகரிப்பில் ஈடுபடும் மாணவ இயக்கத்தினருக்கு வட்டவை, சிற்றூரவை உறுப்பினர்களும், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திக் கழகங்கள், தொழிற்சங்கங்கள் போன்ற பொது நிறுவனங்களும் முழு ஒத்துழைப்பை வழங்குமாறும் வேண்டுகிறோம்.

இவற்றைவிட பதுங்குகுழி காவல்அரண்களுக்கான சாக்கு மண்வெட்டி போன்ற ஏனைய பொருட்களைச் சேகரிப்பதில் வட்ட அவை, சிற்றூரவை உறுப்பினர்களும், பொது நிறுவனங்களும் கூடிய கவனம் செலுத்தி ஈடுபடுமாறு வேண்டுகிறோம்.

## வீரமரணம்

(அளவெட்டி)

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதியில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த தேவாவின் (சி. சந்திரமோகன், வாகரை, மட்டக்களப்பு) புகழுடம்பு, அளவெட்டி அருணோதய கல்லூரியில் மக்களின் அஞ்சலிக்கு, நேற்று முன்தினம் வைக்கப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீர் அஞ்சலியின் மத்தியில் தீயுடன் சங்கமமானது. [எஸ்]

## முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் இயங்குகின்ற அனைத்து மன்றங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கும் வகுப்பு பிரதிநிதிகளுக்குமான முக்கிய கூட்டமொன்று இன்று 27ம் திகதி காலை 9-00 மணிக்கு கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## ஜேர்மனியிலுள்ள

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கையின் வடக்கு-கிழக்கில் தற்போது நடைபெறும் யுத்தம் தொடர்ந்து கொண்டிருப்பதால்இலங்கைதிரும்புவது சாத்தியமற்றதுஎன அங்குள்ள தமிழர் அமைப்புக்கள் பலவும் ஜேர்மன் அரசுக்கு எடுத்துக் கூறியும்கூட எந்தவித பலனும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் கிழக்கு ஜெர்மனியும் மேற்கு ஜெர்மனியும் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வேலையில்லாப் பிரச்னை ஏற்பட்டதும் அதனைத்தொடர்ந்து ஜெர்மன் அல்லாத சகல ஆசிய நாட்டவரையும் வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்று வந்ததும் தெரிந்ததே. (க)

## புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; முன்னாள் பாதுகாப்புராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் கொலை, கூட்டுப்படை தலைமையக குண்டுவெடிப்புச் சம்பவம் ஆகியவற்றின் சூத்திரதாரியான வரதனுக்கு புகலிடமளித்த மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த சந்திரசேகரனை பாதுகாக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முயற்சித்து வருவது எதற்காகவென்றும் அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை இந்திய அமைதிப்படையை எதிர்த்து சண்டையிடுவதற்கு இலங்கை அரசே விடுதலைப்புலிகளுக்கு பெருமளவு ஆயுதங்களை வழங்கியதாக திருமதி பண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்; கடந்த வருடமும், அதற்கு முன்பும் சுமார் 14 மாதங்களாக விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் பேச்சுவார்த்தை நடத்திவந்த சமயம் இந்திய அமைதிப்படையை எதிர்த்து போராடுவதற்கு பெருமளவு ஆயுதங்களை உடன் வழங்கும்படி இராணுவத்துக்கு அரசு உத்தரவிட்டது. இராணுவ உயரதிகாரிகளுக்கு இது பெரும் அதிர்ச்சியைக்கொடுத்தது என அவர் கூறினார்.

## நரசிம்மராவின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ருந்த போதும் காவேரி நீர்ப் பிரச்னை தொடர்பான சர்ச்சையையடுத்து இவரது விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உணவு விநியோக கூட்டம்

[யாழ்ப்பாணம்]

உணவு விநியோகம் சம்பந்தமாக, யாழ் செயலகத்தில் கடந்த வாரம் நடைபெறவிருந்த கூட்டம் எதிர்வரும் 30-ம்திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறுமென யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்தார். [வி]

## விண்ணப்ப

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பரீட்சைப்பகுதி ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை திட்டமிட்டபடி அடுத்த மாதம் 4-ஆம் திகதி நடக்குமோ என்பது பற்றியும் க. பொ. த. (சாதாரண) விசேட பரீட்சை (1990) விரைவில் நடாத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யுமாறும் பரீட்சைப் பகுதி ஆணையாளரிடம் கேட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (152)

## போராட்டக் கருத்தரங்குகள்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டகால, கருத்தரங்குகள் தமிழீழமெங்கும் நடைபெற்றுவருகின்றன.

பெருமளவு மக்கள் இக்கருத்தரங்குகளில் கலந்துகொண்டு விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்டுவரும் போராட்டத்துக்குத் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையிலும், சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயத்திலும், நேற்று வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மைதானம், மற்றும் மாகியப்பிட்டி இரட்டையர் புலம் ஞானவைரவர் கோவில் முன்றலிலும் மேற்படி போராட்டகாலக் கருத்தரங்குகள் நடைபெற்றன.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் பரா உட்பட விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள் பலர் இக்கருத்தரங்குகளில் கலந்து கொண்டு உரையாற்றிவருகின்றனர். [க]

## சடலம் கரை ஒதுங்கியது

(வேலணை

மண்டைதீவு கடற்கரையில் நேற்றுக்காலை உருக்குலைந்த நிலையில் ஒரு பெண்ணின் சடலம் கரை ஒதுங்கியது.

## இலங்கையின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெரோல்ட் ஹேரத் இன்று புதுடில்லி பயணமாவார்.

இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் உட்பட பல இந்தியத்தலைவர்களை அவர் சந்தித்து முக்கிய விடயங்கள் பற்றி பேசுவார்என தெரிவிக்கப்படுகிறது.

இவ்விஜயத்தின் போது இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் நெருங்கிய பொருளாதார கூட்டுஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஹேரத் தமிழர் பிரச்னை குறித்தும் தமிழ்ஈழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக படையினர் மேற்கொள்ளும் யுத்தம் பற்றியும், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது பற்றியும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார்.

ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டபின்பு இலங்கைத்தமிழர் நிலைபற்றி இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு அமையப்போகின்றது என்றும் இருநாடுகளையும் பிரிக்கும் பாக்கு நீரிணையில் இருநாட்டு நிலைமைகளும் எவ்வாறு அமையலாம் என்றும், தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழ்அகதிகள் பற்றியும் இவர் விரிவான முறையில் பேச்சுவார்த்தை நடாத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. [க]

## விடுதலைப் புலிகளை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறது.

இராணுவத்துடன் தற்போது நேருக்கு நேர் முகம்கொடுத்து போரிடும் அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நவீன யுத்த உத்திகளும், அதிநவீனரக ஆயுதங்களும் பாவிக்கப்பட்டால் அரசபடைகள் விடுதலைப்புலிகளை சமாளிக்க முடியுமென இராணுவ உயர்பீடம் அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றைக் கருத்திற்கொண்டே அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து இராணுவ ஆலோசனைகளையும் அதிநவீன ஆயுதங்களையும் பெற முயற்சித்திருக்கிறதுஎன தெரியவந்துள்ளது.

## 139 வீரவேங்கைகள் 14ம், 22ம் திகதிக்குள் வீரமரணம்

[யாழ்ப்பாணம்)

ஆனையிறவு, கட்டைக்காட்டுப்பகுதியில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதல்களில் வீரமரணமடைந்த 139 வீரவேங்கைகள் கடந்த 14ம் திகதி தொடக்கம் 22-ம் திகதிவரை நடைபெற்ற மோதல்களிலேயே வீரமரணமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. 14ஆம் திகதி மோதலில் மாத்திரம் 139 போராளிகள் வீரமரணமடைந்தனர் என்பது தவறென தெரிவிக்கப்பட்டது. [வி]

## ஆசிரியர்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்துள்ள போராளிகளைப் பராமரிப்பதிலும், சிகிச்சையளிப்பதிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

மேலும் 200க்கும் மேற்பட்ட பயிற்சி ஆசிரியர்களும் போராளிகளுக்கு வேண்டிய சாக்கு, மண்வெட்டிகள், பிக்கான்களையும் சேகரித்துவருகிறார்கள். அனைத்துப் பொதுகளும் விடுதலைப்புலிகளுக்கு உதவி வருவதில் முன்நிற்கின்றனர். [க]

## ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் பிரமுகர் ஒருவர் பி. பி. ஸி.க்கு அளித்த பேட்டிக்கு இலங்கை அரசு எதுவும் தெரிவிக்காது மௌனமாயிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

ஆனையிறவு முகாமைநோக்கி படையினர் முன்னேற முயற்சித்த சகல நடவடிக்கைகளும் புலிகளால் முறியடிக்கப்பட்டதாகவும் அப்பிரமுகர் தெரிவித்தாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

**பண்டிதர் சரவணமுத்து சிதம்பரப்பிள்ளை**

பண்டிதர் சரவணமுத்து சிதம்பரப்பிள்ளையின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை [27-07-91] 10. 00 மணிககு 71/2, புங்கங்குளம் வீதி, நவநீதன் ஒழுங்கை, கொழும்புத்துறை இல்லத்தில் நடைபெறும்.

[நேற்றைய ஈழநாட்டில் இந்நிகழ்வு குறிப்பிடப் படவில்லை]

உடன்பிறந்தார் - குடும்பத்தார்

[சி 5035]


இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/186385/81